உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்



அன்னை

## அப்பாப்பிள்ளை — அன்னப்பிள்ளை

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஆவணிமூ வாறு சாதாரண வருடம்
தேவபத பூர்வத் துதியையிலே—தேவபதம்
ஆதிதனை நாடினு அன்னப் பிள்ளையவ
சோதிதுணை யென்றே சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அப்பனும் அம்மையும் சிவமே அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே தேவாதி தேவரும் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே என்னை யாண்டதும் சிவமே.

1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் திகதி தொள்ளாயிரம் பிறைகண்டு தோத்தரித்த எங்கள் அன்னை இறையடி சேர்ந்தமையின்; அவரின் மறைவு குறித்து, மாயா பாசத்தினுல் கட்டுண்டு ஏங்கும் எங்கள் குடும்பத்தோருக்கு மனச்சாந்தி அளிக்க இறைவனை வேண்டி அன்னையின் நினைவு மலருடன், நித்தமும் பாராயணஞ் செய்யக் கூடிய அரும் பொருள் நிறைந்த தோத்திரப் பாக்களையும் சேர்த்து, எமது குடும்பத்தோருக்கு மட்டுமல்லாது மற்றையோருக்கும் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தால் இதனை அன்பர்களுக்கு அர்ப்பணிக்கின்றேம். ''நாம் இந்தச் சரீரத்தைப் பெற்றது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.'' ஆதலில் யாவரும் இத்தோத்திரப் பாக்களை தினமும் மனம் உருகிப், பொருள் உணர்ந்து பாடி கடவுளின் திருவருளால் மனக்கவலையற்று இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அடைவீர்களாக.

வணக்கம்

**அன்னையின் மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீருனாள்-பால்தெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நினைவு

புவனம் போற்றும் புகழுடை இலங்கையில்
தவமுடை பெரியோர் தரித்திடும் தலம்போல்
பலகலைப் புலவரும் பாடுதற் கரிய
நலமிகப் பெற்ற நவாலி யூரில்
வேண்டுதற் கரிய வேளாண் மரபினில்
பண்டைமு றைமைப் பரம்ப ரையாகத்
தோன்றி யுதித்துத் தொன்மை பாராட்டி
நற்கடன் இயாவும் நடாத்தி முடித்து
வையகம் போற்றும் வைத்தியக் கலையுடன்
மதியூகமாயமைந்த மாந்திரீகத்தையும்
மக்களைப் பேணவே மதிப்பாய் நடாத்தி
முதலியார் என்ன முதன்மை பெற்று
முதலித் தம்பியின் மூத்த புதல்வனுஅய்க்
கடமை பெற்ற கந்தப்பு வுக்கும்
வனப்பில் மிக்க வள்ளி யம்மைக்கும்
உலகோர் போற்ற உவந்து தோன்றிய
அற்புதப் புதல்வியாம் அன்னப்பிள்ளை!
அம்மை!
ஐந்திரி திசையில் இயல்பா யமைந்த
திரிகோணு மலையெனும் திவ்விய தலத்தில்
உத்தி யோகத்தில் உயர்நிலை பெற்று
நிலைபர முள்ள நித்திய குடியாய்
பற்பலவ ரிசையும் படைநா ட்டாண்மையும்
எல்லாவா ண்மையும் ஏற்கப் பெற்றும்
தம்புகழ் நிறுவியும் தானம் வழங்கியும்
சைவாஅ சாரமும் தெய்வ பக்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கைடாய் ப்பெற்ற சற்குண சீலராய்
அமைந்து வாழ்ந்த அப்பாவு பிள்ளையின்
சிறந்த புதல்வனும் சின்னத் தம்பிக்கும்
ஐயஅ
செல்லத்துடனே செந்தமி ழொலியும்
வாழ்ந்திடு மரிய யாழ்ப்பாண நாட்டில்
அறுவகைச் சாத்திரம் ஆயும் வேதியர்
அருந்தவ முடையோர் அறிவுடைப் பெரியோர்
உத்தியோ கஸ்தர் உயர் பிரபுக்கள்
சாதி மான்கள் சற்குண வான்கள்
ஆதியோ ரெல்லாம் அமரு மிடமாம்
சீரது பொருந்திய சித்தங் கேணியில்
நற்குல மரபில் நாடி வதிந்த
கதிரொளி யொத்த கதிர ம்மாளுக்கும்
ஆயிரத்தி எண்ணூற்றி எண்பத் தொன்றெனும்
விஷுவாண் டினிலே விளங்கு வைகாசியில்
ஈரேழ் தேதியாம் வியாழக் கிழமையில்
அபரச் சதுர்த்தசி கார்த்திகை முற்கூறில்
சரமெனக் கூறும் மகர லக்கினத்தில்
ரவியுடன் கேதுவும் பஞ்சம விடையில்
சசிகுரு சுக்கிரன் சனியுடன் நாலினில்
குசனவன் மூன்றினில் கணக்கனு மாறில்
தமமாம் ராகுவும் ஆயமாம் தேளில்
உற்றிடப் பெற்ற நற்சாதக நிலையில்
தரணியை ஆளப் பூமியிற் பிறந்த
அப்பாப்பிள்ளை
வளம்படு சுற்றமும் வனப்பும் பெற்று
பல்கலைப் பாடமும் பல் வேறுக
யூகமாய்க் கற்று யுகமதில் வாழ்ந்து
சிற்பக் கலையில் சித்திரம் பலவும்
அற்புத மாகஅ அறிந்து பெற்றும்
ஓவியக் கலையில் ஓதும் பலபொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவையும் நன்கு இயல்பா யறிந்தும்
மதுரைமா நகரில் மாட்சிமை யுடனே
பற்பல வுருவம் படைத்துக் கொடுத்தும்
பதிப்புடைப் பத்திரம் பாங்காய் பெற்று
மதிப்புடை கீர்த்தி மன்னிய வீரன்
இயல்பா யமைந்த இயந்திரக்கலையை
பல்வேறி டங்களில் பாங்காய்க் கற்றும்
உலகி லுள்ளோர் இயாவரும் ஏத்த
இயந்திரக் கலையில் இயங்கிய வீரன்
உலகிடை தோன்றிய உவந்த கைத்தொழில்
பற்பல வற்றையும் பாங்குடன் கற்று
எத்தொழி லாயினும் ஏற்றநல் யூகமாய்
அத்தொழில் தன்னை ஆற்றிடும் வீரன்
ஆயிரத் துடனே தொள்ள யிரம்சேர்
பதினன் காவது ஆண்டினிற் தோற்றிய
ஆங்கில ஜேர்ம யுத்த மதனில்
அலைகடல் தன்னில் ஆடியே செல்லும்
யுத்தக் கப்பலின் இயந்திர அதிபனாய்
பலப்பல தேசமும் பாங்காய்ச் சென்று
வெற்றி கரமாய்ச் சேவை செய்து
மேல்நாட்டவர்கள் மெச்சவே நின்று
பட்டயத் துடனும் பரிசுக ளுடனும்
மீண்டு வந்த யுத்த வீரனும்
ஆய அறிவுடை அப்பாப் பிள்ளையின்
அன்பு மனைவியாம் அன்னப்பிள்ளை
அம்மைஇ
பேரும் புகளும் பெருகப் பெற்று
பலகலைத் தொழிலும் பண்பாய் நடத்தி
குலத்துக் கோர் குலவிளக் காக
சோதியாய்ச் சுடராய் சுற்றம் பேணி
நல்வழிச் செல்லும் நவரத்தினத்தையும்
தோன்றிய சுடரின் தோற்றம் தன்னுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையருள் துணையென இன்பம் பேணும்
செல்வப் பெயருடை செல்லத்துரையையும்
கதிரைக் கந்தன் காதல் நினைவின்
கதிரெனத் தோன்றும் கதிர் காமுவையும்
அருந்தவப் பேற்றின் அருமைப் புதல்வராஅயும்
தன்மனச் சமத்துவம் தரணியிற் காட்ட
கருதிய தன்மையைக் காட்டுவார் போல
சரச மதியுடை சரசு வதியையும்
செல்வப் புதல்வ யாம் செல்வ மணியையும்
அன்புடன் பேணி ஆதரித் தருளிச்
சிருடன் வளர்த்த சிரோன் மணியையும்
பேதமின் றிப்புதல் வியரா கவும்
பெற்றவஅ:
பெற்ற கணவன் பெருமை பேணும்
நற்றவம் பெற்ற நங்கையர் குலுவில்
இரங்கு மனமுடை ருக்பணி தேவியை
மூத்த தனையன் முதல்வியாகவும்
நாடும் பற்றுடை நாகபூ ரணத்தையும்
இணங்கு குணமுடை இராசேஸ் வரியையும்
மனமகிள் மக்களின் மனைவிய ராக்கியும்
போற்றிடு மைத்துனி பொன்னம் மாவின்
நற்தவப் புதல்வன் நடராசாவை
தலைப் புதல்வியின் தலைவ னுக்கியும்
இயைந்த குணமுடை இராச ரத்தினத்தை
இரண்டாம் மகளின் இணைவ னுக்கியும்
நற்றவப் பயனுல் நாளும் தேடி
நாடியே பெற்ற நாக ராசாவை
மூன்றும் மகளின் முதல்வ னுக்கியும்
குடும்ப வாழ்வில் கூட வைத்துஉ
நவரத் தினத்தின் நல்வழி தன்னில்
சோம சுந்தரம் ரத்தின சோதி
ரத்தின குமாரன் ரத்தினராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ ராணியும் தேறப் பெற்றே
தேவ ராணிக் கிசைந்த கணவன்
மருத்து வக்க லைஞனும்
இந்திரா ஆனந்த சபாபதி என்ன
அறுவருடன்
அன்புச் சோமனின் அருமை மனைவி
இந்திரா தேவியும் சேரஅ.
செல்வத் துரையின் சீர்வழி தனிலே
செல்வ சோதி செல்வ நாதன்
செல்வ குமாரனுடன் குககாந் தாவும்
செல்வ ராணி செல்வகுமாரி
நாகலட்சுமி என்ன எழுவரும்
சரசு வதிபெற்ற சாந்தமக்கள்
செல்லை யாவுடன் தம்பிப் பிள்ளை இ.
இருவருக்கும் துணைவியர்
இரத்தினேஸ் வரியுடன் இராசேஸ் வரியும்
செல்வ மணியின் செல்லக் குழந்தைகள்
குலேந்திரத் துடன் செல்வராசா
மகேந்திர ராசா வுடன்
சந்திர லேகா என நால்வரும்
சிரோன்மணி பெற்ற சீருடைக் குழந்தைகள்
செல்வ ராசா சுந்தர ராசா
ரத்தின ராசா என்பவ ருடனே
செவ்வ ராணி எனநால் வரும்
கடைசிப் புதல்வன் கதிர்காமுவின்
கனகராசா ஸ்ரீஸ்க் கந்தராசா
ராசகு மாரியுடன் யோககு மாரியும்
இம் இம் முறையே மூன்று பத்து
பேரப் பிள்ளைகள் பெற்ற சீமாட்டிஇ.
சோமனும் இந்திராதேவியும் நினைவிற்
கீந்த சுரேகா ஆசைப் பூட்டியைப்
பெற்ற பாட்டிஇ —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகு பெண் கனகம் மாவை
உற்றநற் தங்கையாய்ப் பெற்ற அக்கா
இல்லறம் பேணி நல்லறம் செய்து
பெற்ற மக்களைப் பேணி வளர்த்து
பெருமையாய்ப் பாரினில் வாழ வைத்தவ
சுற்றம் பேணிக் குற்றம் களைந்து
குறைகாணுது நிறை மனதுடனே
தெய்வபக்தியுடன் தெய்வம் பேணி
தான தருமம் தயையுடன் செய்து
செல்வ மக்களால் இன்பமும் நுகர்ந்து
ஒழுக்கத் துடனே பழக்கமும் தாங்கி
வரையா வன்மை சிறந்து விளங்கி
வளம்படு சுற்றம் கிளையுடன் பெற்று
திறந்த மனத்துடன் திறம்பட வாழ்ந்த
அம்மையி.
உமதரும் பிரிவின் துயரம் தன்னை
என்னென் றிங்கு எடுத்தியம் பிடுவோம்
நல்தவப் பயனுல் நாடிய மக்களும்
பேற்றைத் தவத்தால் பெற்ற பேரரும்
பூந்தவப் பேரும் பூட்டி ஒருத்தியும்
நல்ல சோதரி கனகம் மாவும்
திறம்படு சுற்றம் சூழல் எல்லோரும்
அல்லும் பகலும் ஆயசத் துடனே
தேம்பித் தேம்பி தேடியே வாடி
விம்மி விம்மி வீரிட் டழவும்
நித்தமும் நின்னை நினைந்து வாடிடவும்
மறக்கொணு நிலையில் மயங்கிவீழ்ந் தலறவும்
நீரினில் குமிழிபோல் நிலை குலைந்திடவும்
உமது பொருளால் உய்ந்த மக்கள்
தமது நிலையில் தயங்கி வாடிடவும்
கூற்றனே உம்மைக் கூவி அழைத்தான்
மாற்றிலா வரிய மாணிக்க மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிலா வெங்கள் திவ்விய சொரூபமே
புகலொணு வரிய பூஞ்செளில் கொத்தே
திகழ்ந்து மன்னிய திலகமே மணியே
எங்கு நீரும் ஏகினீர் அம்மா!
மாயமாய் எங்கு மறைந்தீர் அம்மா!!
மாயஇப் பிறவியை மறந்தீரோ அம்மா!!!
உமது அரியதாய் தந்தையரையும்
அன்புக் கணவர் அடிக் கமலத்தையும்
தேடியோ நீவிர் தென்றிசை சென்றீர்
சாதாரண வருட ஆவணி மூவாறு
பூர்வத் துதியை வியாழக் கிழமையது
உத்தர நாள் நாலாம் பாதமது
சீரிய நல்ல சிங்க லக்கினத்தில்
ரவிசேய் மாலுடன் ஞானியாம் கேதுவும்
உதய லக்கினம் தன்னில் நிற்கவும்
கனிந்த சந்திரன் கன்னியா மிரண்டினில்
முன்னிய குருவும் மூன்றிலே கவியுடன்
கரிய ராகுவும் கருதிய எட்டிலே
ஆறேழ திபதி காரியும் நவத்திலே
கூறிய முறையே கூடப் பெற்ற
சாதகநிலை யுடை நற்சுப வேளையில்
பாசபந்தப் பற்றினை நீக்கி
பிறப் பறுக்கும் பிஞ்ஞகன் றன்
பெய்கழல்கள் சேர்ந்தீர்
எம்மையும் காத்திட என்றும்
நினைவினில் நீடுவாழ்வாய் தாயே

## தேற்றம்

பிறந்தார் இறப்பது திண்ணமிவ் வையத்
திறந்தாரை யெண்ணி வருந்தேல் — மறந்தே
மனமே நாமென்றும் பிறவா திருக்கத்
தினமும் சிவபதத்தைத் தேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் திரு ஆதிரத்தினம் அவர்கள் அளித்த தேற்றம்

### நற்சிந்தனை

## எல்லாம் அவன் செயல்

1 தந்தைதாய் மற்றுந் தமர் தாரமெல்லாருஞ்
சந்தையிற் கூட்டமிது தப்பாது—எந்தைபால்
எப்போது மன்புவை எல்லா மவன்செயலே
இப்போ சமய மிணங்கு

2 எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன்—நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி

3 புறத்தி லலையாதே போனவற்றை யெண்ணி
அறத்தை மறவாதே யாண்டாள்-திறத்தையே
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனு தீதனுய்
அந்தி பகலறியா தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே 1

தாயும் நீயே தந்தைநீயே
சங்கரனே அடியேன்
ஆயும் நின்பால் அன்புசெய்வான்
ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள்
ஐவர்நின்று ஒன்றல்ஒட்டார்
மாயமே என்றஞ்சுகின்றேன்
வலிவல மேயவனே 2

தந்தையார் போயினர் தாயாரும் போயினர்
தாமும் போவார்
கோந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கேமனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே
அந்தணர் ஊர்தொழுது உய்யலாம் மையல்
கொண்டஞ்சல் நெஞ்சே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பெனும் மனைய கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே 4

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம்
அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே
5

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே 6

புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா என்றுந்
தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்கோன் சிரநெரித்த இறைவா என்றும்
எழிலாரூ ரிடங்கொண்ட எந்தாயென்றும்
நலங்கொளடி யென்தலைமேல் வைத்தா யென்றும்
நாடோறும் நவின்றேத்தாய் நன்மை யாமே. 7

ஒல்லையாறி உள்ளமொன்றிக் கள்ளமொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினையகற்றி
நல்லவாறே உன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம் மேயவனே 8

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்றம் இல்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்கு
அரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே 9

பரித்த சுற்றமும் மற்றவள் துணையும்
பலரும் கண்ட தெழுஉயிர் உடலைப்
பிரிந்து போம்இது நிச்சயம் அறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்த்து
கருத்தடங் கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருத்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே 10

வாழ்வாவதுமாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கே தாரமெனீரே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்படை ஞானன்பசு வேறின்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின்
கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத்
தானே. 12

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட
நன்னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின்
கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே
13

பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தவித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
- கோணமாமலை யமர்ந்தாரே.
14

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான் கினுமெய்ப் பொரு ளாவது
நாத னாமநமச் சிவாயவே.
15

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப்பிற வாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே 17

சிவாயநம வென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 18

அருத்தமும் மனையாளொடு மக்களும்
பொருத்தமில்லைப் பொல்லாதது போகட்டும்
கருத்தன் கண்ணுத லண்ணல் காட்டுப்பள்ளித்
திருத்தன் சேவடியைச் சென்று சேர்மினே.
19

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

### நூற்சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே

## சிவபுராணம்

(திருப்பெருந் துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

நமச் சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள்நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளி
யாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்ச் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் கா அட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுஆகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப்
போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடையா
யென்னைக் கண்டு கொள்ளே. 1

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென் புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிண நெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே. 2

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள்
விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர்
தம்பிரான்போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க
ணின்மலா போற்றி போற்றி 3

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய
புகலிடம்பிறிதொன்றில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியோ நமச்சிவாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சய சய போற்றி போற்றி. 4

கடவுளே போற்றி யென்னைக்
கண்டு கொண்டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி
விடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கைவைத்த
சங்கரா போற்றி போற்றி 5

கடையவனேனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின்றோ
லுடையவனே மன்னுமுத்தர
கோசமங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தே னெம்பிரா
னென்னைத்தாங்கிக் கொள்ளே. 6

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கே
னாண்ட நீயருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியே சுடரேசூ ழொளிவிளக்கே
சுரிகுழற்பணை முலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்ருய்ப்
பங்கயத்தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையி
னிறை மலர்க்குருந்த மேவியசீ
ராதியேயடி யேனுதரித் தழைத்தா
லதெந்து வேயென் றருளாயே. 8

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாறும் வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளிய வாருர் பெறுவாரச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண் மணிக்குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

புவன நாயகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
வவனி ஞாயிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலு முகத்தலை மூதூர்த்
தவள மாமணிப் பூங்கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமை நீங்குதற்கே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம்விளங்க
வன்னநடை மடவாளுமைகோ னடியோ
முக்கருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டுகூறுதுமே.

மிண்டுமனத்தவர் போயின்கண் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்தபொருள ளவில்லாதோ
ரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொரு
ளென்றே பல்லாண்டுகூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருமந்திரம்

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே

## தாயுமான சுவாமி பாடல்

தந்தை தாய்தமர் தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததோர் வாழ்வுமோர் இந்திரஜா லக்கோலம்
வஞ்சனை பொறுமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனையி லாதகனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை யென்
கோலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

## பட்டினத்தடிகள் பாடல்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங்கச்சியேகம்பனே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று
வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையாய் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங்
கற்பியுமே.

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பி
விட்டால்
பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்வும்
புவியுமெங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம்
மேடை யெங்கே
கைவைத்த நாடகசாலை யெங்கேயிது கண்மயக்கே.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவன் கணந்தரியேன் உன்ஆணை இதுநீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாய் எனில்யான்
என்ன செய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்
பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்
அகிலமெல்லாம் அளித்திடும் நின்அருள்
மறவாதென்றே
இன்னும் மிகக் களித்திங்கே இருக்கிறேன் மறவேல்
இதுதருணம் அருட்சோதி எனக்குவிரைந்
தருளே.

## கண்ணன் துதி

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைக்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கதிரை முருகன் துதி

ஆடியதோர் பம்பரமதோடி வீழ்வது போலென்
ஆக்கை கெட்டழியு முன்னுன்,
அழியாத திருவடியென் விழியினுற்காண்
பதற்கருள் தருக வேண்டுமையா;
கூடுவிட்டாவிபின் ஓடிய தொடுங்கையில்
குறிப்புடன் காண்பதரிதே,
கூறுவா யிவ்வுலகில் சாருவாய் மீனெனக்
குலைகள் தடுமாறு தையே;
மாடு தனம் வீடெனத் தேடுவதிலென்ன
மனைமக்கள் தாய் தந்தையுடனே,
மகராசனுகவிச் செகமாண்டிருந்தென்ன
வடிவேலா உனதடி தினம்;
தேடிமெஞ் ஞானமதை நாடும்வகை அருளுவாய்
திருவாலினின்றுயின்ற;
செங்கண்மால் மருகனே துங்கவேல்
முருகனே தென்கதிரை வடிவேலனே.

அன்று முருகாவென் றழைத்தவோர் பெண்முன்
வந்தருள்புரிந் தாளவில்லையோ
அருணகிரி நாவினிலிருந்து விளையாடி
யவனுற் கவிதை பெறவில்லையோ
மன்றிலாடிய சங்கரற்குப் பிரணவ மந்திர
மகிமையை உரைக்க விலையோ
வானவர்கள் கோமன்றனக்கு நவமணி
கொண்ட மகுடம் தரிக்கவில்லையோ
என்றுமுனை நம்பிய வகத்தியருக்கு நன்முத்தி
ஈந்து ரக்ஷிக்கவில்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமாஸல் ஹவுஸ் லிமிட்டெட். கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org